1991 செப்டம்பர் 26]

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உரிய கருத்துருவை அனுப்பினால், கால்நடைப் பராமரிப்புத் துறை இயக்குநரின் பரிந்துரையைப் பெற்று, புரட்சித் தலைவியின் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

2. ஒத்திவைப்புத் தீர்மானம்

வடஆற்காடு மாவட்டம், திருப்பத்தூர் வனப்பகுதியில் காவலர் ஒருவர் கொலை செய்யப்பட்டது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒத்திவைப்புத் தீர்மானத்தை மாண்புமிகு எதிர்க்கட்சித்தலைவர் மற்றும் மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஆர். சிங்காரம், திரு. பெ. பொன்னுசாமி, திரு. எஸ். எஸ். ராமசுப்பு, திரு. எ. சம்பத், திரு. வி. தண்டாயுதபாணி, திரு. சி. ஞானசேகரன் ஆகியோர் வட ஆற்காடு மாவட்டம், திருப்பத்தூர் வனப் பகுதியில் வனத்துறை காவலர் ஒருவர் கொலை செய்யப்பட்டார் என்பது பற்றிய பிரச்சினை பற்றி விவாதிக்க இன்றைய பேரவை இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கோரி அறிவிப்பைக் கொடுத்து உள்ளார்கள். இது அவையை ஒத்திவைத்து விவாதிக்கும் அளவுக்கு எவ்வாறு அவசர முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை மிகச் சுருக்கமாக விளக்கக் கேட்டுக்கொள்கிறேன். திரு. சி. ஞானசேகரன்.

முற்பகல் 10 15

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடஆற்காடு அம்பேத்கார் மாவட்டத்தில் வாணியம்பாடி தாலுகாவிலே இருக்கிற ஆலங்காயம் சரகத்திலே கைலாசம் என்ற வனப் பாதுகாவலர் நரசிங்கபுரம் என்ற காட்டிலே பணியாற்றிக் கொண்டிருக்கிறபோது 4 பேர்கள் சந்தனக் கட்டைகளைக் கடத்தி இருக்கிறார்கள். சென்ற 20 ஆம் தேதி இந்த நிகழ்ச்சி நடந்து இருக்கிறது. அதை தடுப்பதற்காக கைலாசம் என்ற 35 வயது வாலிபர், அவர் எங்களுடைய கிராமத்தைச் சேர்ந்தவர். அவர் கடத்துவதைத் தடுத்தபோது அவரை அடித்து, உயிரோடு எரித்து இருக்கிறார்கள் சந்தனக் கடத்தல்காரர்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் சந்தன கட்டைகளே இல்லாமல் போய் விடுமோ என்ற அளவுக்கு கடத்திவிட்ட சூழ்நிலையில், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதவியேற்ற பிறகு இன்று மூன்று குற்றங்கள் தமிழகத்தில் ஓரளவுக்கு குறைந்திருக்கிறது. விடுதலைப்புலிகளை வேரறுத்து இருக்கிறார்கள். மதுவை ஒழித்து இருக்

[குறிப்பு; ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்]

[திரு. சி. ஞானசேகரன்] [1991 செப்டம்பர் 26

கிறார்கள். சந்தனக்கட்டை கடத்துவதைத் தடுத்து இருக்கிறார்கள். இப்படி சந்தனக்கட்டை கடத்துவதை தடுத்து அதிரடி நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிற மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய நடவடிக்கை காலத்தில், இன்று கடத்துவதற்கு தடையாக இருக்கிற இந்த அரசு அலுவலர்களை அச்சுறுத்துகிற வகையில் உயிரோடு எரித்து இருக்கிறார்கள். இப்படிப்பட்ட பிரச்சனை இன்று அரசு அதிகாரிகளிடையே, பொதுமக்களிடையே ஒரு பதட்ட நிலையை உருவாக்கி இருக்கிறது. சீரிய முறையில் பணியாற்றுகிற அரசு ஊழியர்களுக்கு இன்று நமக்கு பாதுகாப்பு இல்லாமல் போய்விடுமோ என்று அஞ்சுகிற நிலை இருக்கிறது.

ஆகவே, இப்படிப்பட்ட அநாகரிகமான, மனிதாபிமானமற்ற முறையில், காட்டுமிராண்டித்தனமாக அரசு அலுவலர்களையே கொலை செய்கிற அளவுக்கு குற்றவாளிகள் இன்று கையோங்கி இருக்கிற நிலையை தடை செய்கிற வகையில் முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கையெடுக்க வேண்டும். அதைப்போல 56-வது விதியின்படி அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இன்று விவாதிக்க அனுமதியளிக்கும்படி மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர்.

மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. கைலாசம், வேலூர்—ஆலங்காயம் காட்டுப் பகுதியில் வனத்துறை காவலராகப் பணிபுரிந்து வந்தார். அவர் 20–9–1991 அன்று ஒரு நாள் விடுப்பில் தனது சொந்த ஊரான நன்னேரிக்குச் சென்று, அன்று இரவே திரும்பியுள்ளார். ஆனால் அவர் 23-9-1991 அன்று காலை வரையில் பணிக்கு வராததால் ஆலங்காயம் வனச்சரக அலுவலர் காவல் துறையிடம் 23–9–1991 காலை 10.15 மணிக்கு புகார் செய்துள்ளார். இதுகுறித்து ஆலங்காயம் காவல் நிலையம் குற்ற எண் 197/91—ல் under section–Man missing பிரிவில் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொள்ளப்பட்டது. காவல் துறையினரும், வனத்துறையினரும் காணாமல் போனவரை தீவிரமாகத் தேடியதில் உடல் எரிந்த நிலையில் எலும்புக்கூடு ஒன்று மேட்டூர்—நிம்மியம்பட்டு மெயின் ரோடு வனப்பகுதியில் 25–9–1991 அன்று மாலை கண்டுபிடிக்கப்பட்டது. அதன் அருகில் கிடந்த வனத்துறை சின்னம்—Forest Department Batch மற்றும் ஒரு சைக்கிளை வைத்து இறந்தவர் வனத்துறை காவலர் கைலாசம் என்று உறுதி செய்யப்பட்டுள்ளது. எனவே, இந்த வழக்கின் பிரிவுகளை 302 மற்றும் 201 ஐ.பி.சி.யாக, கொலை மற்றும் தடயங்களை மறைத்தல் குற்றப்பிரிவுகளுக்குமாற்றப்பட்டுள்ளது. இதுகுறித்து இன்று வாணியம்பாடி வட்டாட்சியர் பிரேத விசாரணை செய்கிறார். இக்கொலையில் அருகிலுள்ள கிராமங்களில் வசிக்கும் சந்தனக்கட்டைகளைத் திருடும் வனக் குற்றவாளிகளுக்கு தொடர்புள்ளதாக கிடைத்த தகவலின்பேரில்

காவல்துறையினருக்கு, விரைந்து குற்றவாளிகளைப் பிடிக்க தீவிரமாக நடவடிக்கைகள் எடுக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இனிமேல் இத்தகைய நிகழ்வுகளைத் தடுக்க அலுவலர்களுக்கு, வனத்துறை அதிகாரிகளுக்கு, காவலர்களுக்கு தக்க பாதுகாப்பு அளிக்க ஏற்பாடு செய்யப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இது குறித்து விவாதிக்கத் தேவையில்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், சந்தனக்கட்டைத் திருட்டை தடுக்கும் வேளையில் கடமையைச் செய்யும்போது வீரமரணம் அடைந்த திரு. கைலாசம் அவர்களது குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஒரு லட்சம் ரூபாய் அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப்பிறகு அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இதுகுறித்து விவாதிக்கத் தேவையில்லை என்பதால் இதற்கு இசைவு மறுக்கப்படுகிறது.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

3. முக்கியப் பிரச்சினை.

மதுரையில் காவல்நிலையம் ஒன்றில் வழக்கறிஞர் ஒருவர் தாக்கப்பட்டதாகக் கூறப்படுவது குறித்து முதலமைச்சரின் விளக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மதுரையில் காவல்நிலையம் ஒன்றில் வழக்கறிஞர் ஒருவர் தாக்கப்பட்டதாகக் கூறப்படும் பிரச்சினை குறித்து அரசின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டுமென்று கோரி, திரு.எஸ். ஆண்டித்தேவர், திரு. எ. தெய்வநாயகம் திரு. ஓ. எஸ். அமர்நாத், திரு. எஸ். வி. சண்முகம் ஆகியோர் என்னுடைய கவனத்திற்கு ஒரு பிரச்சினையைக் கொண்டு வந்துள்ளார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் இதுகுறித்து அவைக்கு ஒரு விளக்கம் தரவேண்டுமென்று கருத்துத் தெரிவித்திருப்பதால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை இதுபற்றிய விளக்கத்தை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.